# பட்டயம்

மலர் - 05    மார்ச் - 2009    இதழ் - 05

Date of Issue : 01-03-2009

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 5

Issue : 5    Price Per Copy : Rs.5.00



## 2009

இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ,
அதை எனக்கே செய்தீர்கள். (மத்தேயு 25:40)

## சத்திய மலர்

"HELP US TO LOVE YOU
AND MANKIND"

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.org

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

**33. பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கு அடையாளங்கள் எவைகள்?**

i) அந்நிய பாஷையில் தேவனைத் துதிப்பார்கள்; தேவனிடம் பேசுவார்கள். அபிஷேகம் பெறும் பொழுது முதலாவது 1 பாஷை கிடைக்கும்; பிறகு அநேக பாஷைகள் பேச முடிகிறது. பாஷைகள் வந்து கொண்டே இருக்கும். மனுஷர் பாஷையோ அல்லது தூதர் பாஷையோ நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். உலகத்தில் 6500 மொழிகள் உண்டு; ஆனால் பரலோகத்தில் எத்தனை பாஷைகள் என சொல்ல முடியாது. அவர்கள் பாஷையை சுத்தமான பாஷையாக மாறப் பண்ணுவேன் என செப்பனியா 3/9 கூறுகிறது. நவமான பாஷைகளைப் பேசுவார்கள் என மாற்கு 16/17 கூறுகிறது. பூமியிலும், பரலோகத்திலும் அவரைப் புகழ இந்த பாஷைகளைத் தருகிறார்.

ii) ஜெபத்தில் ஆசை வரும். 1 செகண்டு கூட ஜெபிக்காமல் இருக்க முடியாது. இது விண்ணப்பத்தின் ஆவியாகும்.

iii) தேவ ஞானம் கிடைக்கும் - இதற்கும் உலக ஞானத்திற்கும் சம்பந்தம் கிடையாது. தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தது. அவனுக்கு மற்றவர்களை விட 10 மடங்கு ஞானம் இருந்தது. பரிசுத்தாவியைப் பெற்றவர்கள் மற்றவர்களைவிட எல்லாவற்றிலும் 10 மடங்கு வித்தியாசமானவர்கள்.

iv) தேவ பெலன் கிடைக்கும் - சரீரத்தில் தேவ பெலன் வரும்போது நீங்கள் மற்றவர்கள் செய்கிற காரியத்தை விட சீக்கிரமாகவும், இலகுவாகவும் எதையும் செய்ய முடியும்; சிம்சோனுக்குள் தேவ ஆவி இருந்தபடியால் 2 கைகளையும் வைத்து தூணைத் தள்ளிப் போட்டான். தேவ பெலன் இருந்தால் உபவாசம் இருந்தாலும் ஒன்றும் செய்யாது; ஆத்மாவில் பெலன் தந்து தைரியப்படுத்துவார். எதைக் கண்டும் பயம் வராது.

v) ஆண்டவர் மேல் இன்னும் அன்பு வரும்; ஆண்டவர் மேல் பட்சிக்கிற பக்தி வைராக்கியம் இருக்கும். எந்த எதிர்ப்புகள் வந்தாலும் சோர்ந்து போக மாட்டார்கள்.

vi) ஆவியின் கனி வாழ்வில் காணப்படும் - பரிசுத்தாவியை பெற்றால் கலாத்தியர் 5/22ல் கூறப்பட்டுள்ள ஆவியின் கனிகள் இருக்கும். அன்புக்கு பதில் வம்பு இருக்கிறதா? எப்போதும் முறுமுறுப்பு இருக்கிறதா? சமாதானம் இல்லையா? நீடிய பொறுமை இல்லையா? எதற்கு எடுத்தாலும் கோபம் வருகிறதா? எப்போதும் அவிசுவாசமும் பயமும் இருக்கிறதா? பகைக்கிற சுவாவம், இச்சை உன்னில்

இருக்கிறதா? இவைகள் உன்னில் இருந்தால் உன்னிடம் பரிசுத்த ஆவி இல்லை. பரிசுத்த ஆவியை நீ பெற்றிருந்தால் உன்னிடம் ஆவியின் கனிகள் காணப்படும்; அவைகளில் வளர்ச்சியும் உண்டாகும்.

vii) பரிசுத்த ஆவியைப் பெற்றபின் ஆவியின் வரங்களை அவர் சித்தப்படி தருகிறார். (I கொ.12/7). பரிசுத்தாவியைப் பெறாமல் வரங்களை பெற முடியாது. அபிஷேகம் பெறும் பொழுது 1 பாஷை கிடைக்கிறது; ஆனால் ஆவியின் வரங்கள் பெறும் போது பற்பல பாஷைகள் கிடைக்கிறது. அபிஷேகம் பெற்றவர்கள் எல்லாரும் பற்பல பாஷைகள் பேசுவார்கள் என சொல்ல முடியாது. ஆனால் கட்டாயம் 1 பாஷை பேசுவார்கள். அது சுத்தமாக இருக்கும்; கேட்பதற்கு ஜீவத் தண்ணீர் போல இருக்கும்.

viii) பரிசுத்தாவியைப் பெறும் பொழுது பிசாசு உங்களை மேற்கொள்ள முடியாது. பிசாசு போராடலாம். ஆனால் மேற்கொள்ள முடியாது. எல்லா ஆவியையும் நம்பாமல் அவைகள் தேவனால் உண்டாயினவா என்று சோதித்தறியுங்கள் (I யோ.4/1). நீங்கள் பெற்றுக் கொள்ளுகிற ஆவி பரிசுத்தாவியாக இருக்க வேண்டும். “ஆண்டவரே உம் நல்ல ஆவியை என்னிலே ஊற்றும்” என ஜெபிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளான எரேமியா, தானியேல் போன்றோர் அபிஷேகிக்கப்பட்டிருந்தார்கள். சங்கீதக்காரன் தாவீதுக்குள் தேவ ஆவி இருந்தது. தேவ ஆவி பெற்றவர்கள் விசேஷமானவர்களாக இருந்தார்கள்.

சிலர் சபைக்கு போனதும் ஆவியில் துள்ளுவார்கள். வெளியே போனதும் கெட்ட வார்த்தை. அப்படியானால் பெற்றுக் கொண்ட ஆவி எது? பொருளாசையை என்றைக்கு உன் இருதயத்தை விட்டு கழற்றுகிறாயோ அன்றைக்குத் தான் உனக்கு பரிசுத்த ஆவி கிடைக்கும்.

உலகம் அந்த ஆவியைப் பெற்றுக் கொள்ள மாட்டாது என யோ.14/17 கூறுகிறது. உலக சிநேகமுள்ள மக்கள் பரிசுத்த ஆவியைப் பெற முடியாது. உலக சிநேகம் ஒரு மனிதனுக்குள் இருந்தால் அது பரிசுத்த ஆவி அல்ல; அது வஞ்சக ஆவி. உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என யாக் 4/4 கூறுகிறது. கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை இந்த மூன்றையும் விடாவிட்டால் பரிசுத்த ஆவியைப் பெற முடியாது.

## 34. திறப்பின் வாசலில் நிற்பது என்றால் என்ன?

ஆண்டவர் நமக்கு 2 வேலையைக் கொடுக்கிறார்.

1. உலக வேலை

2. ஜெப வேலை

உங்கள் குடும்பம் காக்கப்பட வேண்டுமானால் உலக வேலையை மாத்திரம் செய்தால் போதாது. ஜெபம் எனும் வேலையை செய்யாவிட்டால் வீட்டிற்குள் சாத்தான் வந்து விடுவான். அதைப்போல தேவனுடைய ஆலயமாகிய வீட்டில் சாத்தான் வந்து விடுவான். எல்லா ஊழியமும் செய்தாலும் ஜெபம் செய்யாவிட்டால் பயனில்லை. ஊழியம் செய்வது வேறு; ஜெபிப்பது வேறு; ஆலயத்தின் வேலை ஊழிய வேலையாகும். ஜெப வேலை இல்லாமல் (காவல் duty) ஊழியம் மட்டும் செய்தால் போதாது.

திறப்பின் வாசலில் நிற்கிற ஒரு மனுஷனைத் தேடினேன்; ஒருவனையும் காணேன் (எசே 22/30). திறப்பின் வாசல் என்றால் சாத்தான் திறக்கிற வாசல். அந்த வாசலில் நின்று சுவரை அடைக்க ஜெபிக்கிற ஜாமக்காரர்களை ஆண்டவர் எதிர்பார்க்கிறார். ஒரு மனிதன் 24 மணி நேரம் தூங்காமல் ஜெபிக்க முடியாது. 24 மணி நேரத்திற்கு 24 பேர் சங்கிலியாக ஜெபிக்க வேண்டும்; 24 மணி நேரம் ஜெபிக்கிற ஜாமக்காரர்கள் எழும்ப வேண்டும். சபையாகிய ஏதேன் தோட்டத்தை பண்படுத்தும் வேலை என்றால் உபதேசிக்கிற வேலை. இது ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. தோட்டத்தை காக்கும் வேலை ஜெபிக்கும் வேலையாகும். இது விசுவாசிகளுக்கும் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு விசுவாசிகளும் தினமும் 1 மணி நேரம் ஊழியங்களுக்காக, விசுவாசிகளுக்காக ஜெபிக்க திறப்பின் வாசலில் நிற்க வேண்டும். எந்த மணி நேரம் ஜெபிக்க ஆளில்லையோ அந்த வாசல் திறந்திருக்கும். அப்போது சாத்தான் அந்த வாசல் வழியாய் சபைக்குள் பிரவேசிப்பான்.

“ஆளில்லை ஆளில்லை அழுது ஜெபிக்க ஆளில்லை”. எந்த நேரம் உள்ளே வரமுடியுமோ அந்த நேரம் சாத்தான் உள்ளே நுழைவான். யாரை கையில் எடுத்தால் அவன் காரியம் நடக்குமோ அந்த நபரை கையில் எடுப்பான். ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுவேன் என ஏசாயா 62/6 ல் வாசிக்கிறோம். பகலில் ஜெபிக்க அநேகர் முன்வருவார்கள். தூக்கத்தையும் வெறுத்து ஜெபிக்க வேண்டும். இரவிலும் ஜெபிக்க உங்களை ஒப்புக் கொடுங்கள்.

இராத்திரியில் முதல் ஜாமத்தில் கூப்பிடு. ஆண்டவரின் சமூகத்தில் உன் இதயத்தைத் தண்ணீரை போல ஊற்றி விடு. இரவு 12-3 முதல் ஜாமத்தில் எழும்பி ஜெபித்தால் அதிக பலன் உண்டு. அநேக பிசாசின் கிரியைகள் இரவில் தான் செயல்படும். அந்த நேரத்தில் திறப்பின் வாசல் நிற்கிறவர்கள் எழும்ப வேண்டும். இரவிலும் நம் விளக்குகள் எரிய வேண்டும். சத்தியம் என்னும் கச்சை அரையில் கட்ட வேண்டும். சாத்தான் அநேகமாக நாம் நித்திரை செய்கிற வேளையில் தான் வருவான். அப்படியானால் அந்த நேரம் சங்கிலிபோல தொடர்ச்சியாக ஜெபிப்பவர்கள் எழும்பினால், சாத்தானும் சத்ருவும் உள்ளே நுழைய முடியாது (புலம்பல் 2/19).

**கர்த்தர் 5 கட்டளைகள் கொடுக்கிறார் (ஏசாயா 21/5)**

1) பந்தியை ஆயத்தப்படுத்துங்கள் - இராப்போஜனம் மூலம் தேவனோடு ஐக்கியப்பட உறுதியாயிரு.

2) ஜாமக்காரரை வையுங்கள் - இராத்திரியில் ஜெபிக்கிறவர்கள் எழும்ப வேண்டும்.

3) புசியுங்கள் - வேதவசனத்தை அதிகமாகத் தியானித்து ஜெபிக்க வேண்டும்.

4) குடியுங்கள் - ஆவியினால் எப்போதும் நிரம்பி ஜெபி.

5) பரிசைகளுக்கு எண்ணெய் பூசு - அபிஷேகம் பெற்று, பரிசுத்த ஆவியினால் ஜெபித்து ஜெயம் எடுக்கிற பிள்ளைகளாக மாற வேண்டும். இராத்திரியிலே ஒரு குறிப்பிட்ட நேரத்திலே எழும்பி ஜெபிக்க உங்கள் நேரத்தை ஒப்புக்கொடுங்கள். ஜெப வீரர்களாக மாறாத கட்டத்தில் செயல் வீரர்களாக மாற முடியாது. ஆகவே ஜெபவீரர்களாக மாற ஒப்புக்கொடுங்கள்.

சத்துரு நம்மை கொல்லுவதற்கு 1000 வழிகள் இருக்கலாம். ஆனால் காப்பாற்றுவதற்கு ஒரே வழி ஜெபம் தான். 'ஜெபம்' என்ற வேலையை செய்யாத கட்டத்தில் சபை காக்கப்பட முடியாது.

## 35. சத்தியம் என்றால் என்ன?

திருவசனம் வேதத்தில் இருக்கிறது. ஆரஞ்சு பழம் இருக்கிறது; மேலே தோல் இருக்கிறது; தோலை எடுத்தப் பிறகுதான் சாறு எடுக்க முடியும். அதுபோல வசனத்தின் சாறை எடுக்க வேண்டும். அது தான் சத்தியம். திருவசனத்தில் ஒன்றை மாத்திரம் வைத்து வாசித்தால் அதிலே நாம் சத்தியத்தை எடுக்க முடியாது. பல வசனங்களைச் சேர்த்தே சத்தியத்தை எடுக்க முடியும். வேதத்தில் முக்கியமான

வசனங்களும் உண்டு; முக்கியமில்லாத வசனங்களும் உண்டு; எதற்காக தேவன் அவைகளை வேதத்தில் வைத்திருக்கிறார் என்றால் வசனங்களை இணைப்பதற்காக.

ஆரஞ்சு பழத்தில் சாறை மட்டும் எடுக்கிறோம். ஆகவே சாறு மட்டும் ஆண்டவர் ஏன் படைக்கவில்லை என கேட்டால் முடியுமா? முடியாது. தோல், சக்கை இருந்தால் தான் சாறு நிற்கும். வேத வசனமாகிய ஆவியின் பட்டயத்திலே சாறைப்போல சில இருக்கும்; வித்து போல சில இருக்கும். சிலர் இந்த சக்கையையும், தோலையும் பிடித்துக் கொண்டு சாறை விட்டு விடுவார்கள். தோல் எதற்காக சேர்க்கப்பட்டுள்ளது என்பதை நினைப்பது இல்லை. அநேகர் சத்தியத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதில்லை. நெகேமியா 7ம் அதி சில வம்சவரலாறு கூறப்பட்டுள்ளது. வேத பண்டிதர் இதை வைத்து கேள்வி கேட்பதால் எந்த பிரயோஜனமும் இல்லை. இதைத் தெரிந்து கொண்டால் ஆவிக்குரிய வளர்ச்சி உனக்கு வரப்போவதும் இல்லை. சில ஊழியர்கள் சொல்ல வேண்டிய சத்தியத்தை சொல்கிறது இல்லை. இராப் போஜன சத்தியம், ஞானஸ்நான சத்தியம் போன்றவைகளை சொல்வது இல்லை; விக்கிரக ஆராதனை செய்யக் கூடாது என சொல்வது இல்லை. இது ஆரஞ்சு பழத்தில் சாற்றைப் பிழிந்து தூர எறிந்து விட்டு சக்கையையும் தோலையும் தின்பது போன்றது. வசனம் கேட்டால் ஆதியாகமத்திருந்து வெளிப்படுத்தல் வரை சரியாகச் சொல்வார்கள். ஆனால் சத்தியத்திற்கு செவி கொடுப்பது இல்லை. Bible-ஐ பாராமல் படித்து வைத்திருப்பது வெறும் ஆரஞ்சு பழத்தோலை தின்பது போன்றது. வசனத்தை அறிந்தால் மட்டும் போதாது. அது என்ன போதிக்கிறது என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

கற்க கசடற கற்பவை – கற்றபின்
நிற்க அதற்குத் தக

சிலர் சத்தியத்தை அறிந்து கொள்கிறார்கள்; ஆனால் சத்தியத்திற்குக் கீழ்படிவதில்லை, எனக்குத் தெரியாத வசனமா? எனக்கு தெரியாத சத்தியமா? என சொல்லுவார்கள்.

பரலோக வாசல் போய் கதவைத் தட்டிச் சொல்லுங்கள் “ஆண்டவரே எங்கள் கோயில் போட்டி வைத்தார்கள்; நான் தான் 1st prize. எத்தனை மெடல், cup பரிசாக வாங்கினேன் தெரியுமா? என சொன்னால் ஆண்டவர் சொல்லுவார், “உனக்குத் தெரியாத bible இல்லை; உனக்குத் தெரியாத சத்தியம் இல்லை; ஆனால் நீ

கீழ்படியவில்லை, get out'' என்பார். சத்தியத்துக்குக் கீழ்படியாவிட்டால் உனக்கு பரலோகில் இடம் இல்லை

## 36. நல்ல கனி கொடுக்க என்ன செய்ய வேண்டும்?

"நான் ஒரு கனியற்ற பாழ்நிலம். முழு நெஞ்சமும் ஆண்டவரை முழுமையாக தேட முடியவில்லை" என்று நீ சொல்லலாம். நற்கனி கொடுக்க நல்ல பரிசுத்த ஆவியைப் பெற வேண்டும். வெறும் படிப்பு, பணம், பதவியினால் நற்கனி கொடுத்து விட முடியாது. கிறிஸ்துவின் ஆவியை நீ பெறும் பொழுது தான் நல்ல கனி கொடுக்கும் விசேஷித்த பாத்திரமாய் நீ மாற முடியும். பரிசுத்த ஆவியைப் பெற்று ஆவியின் உதவியினால் அவருக்கு உகந்த நல்ல கனி கொடுக்க வேண்டும். அவருக்குப் பிரியமான கனிகளை, தேவ இராஜ்யத்துக்கேற்ற கனிகளை, நற்கிரியையாகிய கனிகளை, ஆவியின் கனிகளை நீங்கள் அதிகமாகக் கொடுத்து அவருக்கு மகிமை சேர்க்க வேண்டும். பரிசுத்த ஆவியைப் பெறும்போது தான் பரம சந்தோஷம், சிநேகம், நீடிய சாந்தம், தேவ சமாதானம், நற்குணம், தயவு, திட விசுவாசம் கிடைக்கும். பரிசுத்த ஆவியைப் பெறும் பொழுது தான் இந்த கனிகள் கிடைக்கும்.

இட்□சாப்பிட hotel-க்கு போனால் முதல் கேட்காமலேயே வடை வந்து விடும். பின் சட்னி, சாம்பார், இட்□பொடி, எண்ணெய் கேட்காமலேயே கிடைக்கும். அது போல பரிசுத்த ஆவியை முதல் பெற்றால் மற்றவைகள் எல்லாம் தானாகவே கிடைக்கும். மண்ணெண்ணெய் விளக்கில் எண்ணெய் இல்லை; திரி மட்டும் Super ஆக இருக்கிறது; எண்ணெய் இல்லாதபடியால் விளக்கு எரியவில்லை. முன் காலங்களில் பரிசுத்தாவி அதிகமான பேருக்கு ஊற்றப்படவில்லை. உங்கள் தாத்தா, பாட்டி பக்தியாக வாழ்ந்திருக்கலாம். அவர்கள் பரிசுத்தாவியைப் பெறாதபடியால், நானும் பெற வேண்டிய அவசியமில்லை என எண்ண வேண்டாம். பரிசுத்தாவியானவரின் உதவியில்லாமல் 1 அடி கூட கிறிஸ்தவ ஜீவயத்தில் வளர முடியாது; வெற்றி பெறவும் முடியாது. பரி. ஆவியின் பெலத்தைக் கொண்டுதான் சாத்தானை ஜெயிக்க வேண்டும். சாத்தானை ஜெயிக்காத கட்டத்தில் நீ கனி கொடுக்க முடியாது. ஒளி கொடுக்க முடியாத ஒரு திரியாக இருக்கிறேன். பாவ அசுத்தங்களை விலக்கிப் போடும் என ஜெபி.

## 37. பின்மாரி மழை எதற்கு ஊற்றப்பட வேண்டும்?

பரிசுத்த ஆவியைப் பெற்றால் மட்டும் போதாது, மழை போல் ஊற்றப்பட்டு கொண்டே இருக்க வேண்டும். கடைசிக் காலத்தில் அநேக புறஜாதியார் இயேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படியானால் பின்மாரிக்கால ஆவி மழை பொழியப்பட வேண்டும். இந்த மழை பொழியப்பட்டால் ஆதி அப்போஸ்தலர் காலத்தில் நடந்த பெரிய பெரிய அற்புதங்கள் நடக்கும். ஏன் இப்போது நடக்கவில்லை? பின்மாரிக்கால மழை ஊற்றப்பட வில்லை.

சகரியா 10/1ன் படி பின்மாரிக்கால மழைக்காக வேண்டிக்கொள்ளுங்கள். உலகம் முழுவதும் இந்த பின்மாரிக்கால மழை ஊற்றப்பட வேண்டும். பின் மாரிக்கால அக்கினி மழை இன்னும் பொழியப்படாதபடியால் சிறிய சிறிய அற்புதங்கள் தான் நடக்கின்றன. ஆதி அப்போஸ்தலர் காலங்களில் நடந்த அற்புதங்கள் இப்போது இல்லை. ஏசாயா 34/16ன் படி உன்னதத்திருந்து ஆவி நம்மேல் ஊற்றப்பட வேண்டும். யாக்கோபு 5/7ல் முன்மாரியும் பின்மாரியும் வரக் காத்திருங்கள் என கூறப்பட்டுள்ளது. பின்மாரி மழை ஊற்றப்படும் போது முடவன் மானைப் போல் குதிப்பான்; குருடரின் கண்கள் திறக்கப்படும்; செவிடர் புஸ்தகத்தின் வார்த்தைகளைக் கேட்பார்கள்.

ஆவியை மழைபோல ஊற்றும், பல ஆடுகள் இயேசு மந்தையில் சேர்க்கப்பட வேண்டும் என ஜெபியுங்கள்.

## 38. கர்த்தரிடம் ஒப்புவித்தல் என்றால் என்ன?

உங்கள் பொருட்களைக் குறித்து கவலைபடுகிறீர்கள்; பயப்படுகிறீர்கள். ஆண்டவர் அவைகளைப் பார்த்துக் கொள்வார் என விசுவாசியுங்கள். நீங்கள் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என அறிந்து கொள்ளுங்கள். பயத்திற்கல்ல விசுவாசத்திற்கு இடம் கொடுங்கள். உங்களுக்கு ஆண்டவர் தந்த எல்லாப் பொருட்களையும் அவர் கரத்தில் கொடுங்கள். உங்களுக்குண்டான எல்லாவற்றையும், சகல நன்மைகளையும், வீட்டையும், பொருட்களையும், சொத்துக்களையும், வசதிகள் எல்லாவற்றையும் ஆண்டவர் கரத்தில் ஒப்புவியுங்கள். அப்போது இயேசுவின் இரத்தம் ஒப்பிவிக்கப்பட்ட ஒவ்வொன்றையும் மூடிக்கொள்ளும். ஒருவரும் திருடாதபடிக்கு, பறிக்காதபடிக்கு, அழிக்காதபடிக்கு ஆண்டவர் ஒவ்வொன்றையும் பாதுகாத்துக் கொள்வார்.

## 39. 'கர்த்தரிடம் ஒப்படைத்தல்' என்றால் என்ன?

உங்களையே முழுமையாய் ஆண்டவரிடம் ஒப்படையுங்கள். ஒரு மருத்துவரை விட ஆண்டவர் பெரிய மருத்துவர். ஆகவே அவரிடம் உங்கள் சரீரத்தை முதலாவது ஒப்படையுங்கள். ஆதாமை மண்ணினால் உண்டாக்கி ஜீவ சுவாசத்தை ஊதினார். அப்படியானால் உங்கள் நரம்பு, எலும்பு எல்லா அவயவமும் அவர் கண்ணுக்குத் தெரியும். உச்சி முதல் உள்ளங்கால் வரை உங்கள் பரம மருத்துவரிடம் ஒப்படையுங்கள். எந்த அளவுக்கு விசுவாசிக்கிறீர்களோ அந்த அளவுக்கு ஆண்டவரிடம் நன்மைப் பெறுவீர்கள். உங்கள் கருவை ஆண்டவரின் கண்கள் கண்டது. உங்கள் அவயவங்களில் ஒன்றாகிலும் உண்டாகுமுன்னே அவைகள் உருவேற்படும் நாட்களும் தேவன் தமது புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். (சங் 139/16). இதை விசுவாசித்து உங்கள் அவயவங்களில் பாவத்தால், சாத்தானால் வந்த சகல பெலவீனங்களும், வியாதிகளும் மாறும்படி இயேசுவிடம் ஒப்படையுங்கள். அப்போது பரம மருத்துவர் உங்களை முற்றிலும் குணமாக்குவார்.

## 40. கர்த்தரிடம் ஒப்புக்கொடுத்தல் என்றால் என்ன?

ஆண்டவரே என் சித்தம் அல்ல, உம் சித்தம் என்னில் நிறைவேறத்தக்கதாக என்னை ஒப்புக் கொடுக்கிறேன். உம் சித்தப்படி என்னை நடத்தும்; உம் சித்தப்படி வாசல்களைத் திறந்து வழிகாட்டும்; ஒளிகாட்டும், கொண்டு செல்லும்; உம் சித்தத்திற்கு முழுமையாக என்னை ஒப்புக் கொடுக்கிறேன். உம் சித்தமே ஆவதாக; நடப்பதாக என ஜெபிப்பது தான் ஒப்புக் கொடுத்தல் ஆகும்.

## 41. 'அர்ப்பணித்தல்' என்றால் என்ன?

ஒப்புக்கொடுக்காமல் அர்ப்பணிக்க முடியாது. அவர் சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்காவிட்டால் அர்ப்பணம் வராது. ஒவ்வொரு நாளும் இவ்வாறு ஜெபியுங்கள். "இந்த நாளை எனக்குத் தந்தீர், உம் சித்தப்படி என்னை நடத்தும். என் இஷ்டம், பிசாசின் இஷ்டம் நான் செய்யக் கூடாது. உமக்கு இஷ்டமான இடத்திற்கு மாத்திரம் நான் செல்ல வேண்டும். நான் எதைச் செய்தாலும் உம் இஷ்டப்படிதான் செய்ய வேண்டும்". அப்போது ஆண்டவர் உங்களை தம் சித்தப்படி சரியாக நடத்துவார். கோணல்கள் அதில் வந்தாலும், தப்பு, தவறு வந்தாலும் அதை அவர் பார்த்துக் கொள்வார். அவர் சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கிறபடியால் எதுவும் நம்மை மேற்கொள்ள முடியாது. இயேசு தம் இரத்தத்தால் மூடிக் கொள்வார்.

தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்த பிறகு லாபமோ, நஷ்டமோ, கஷ்டமோ, துன்பமோ, நெருக்கமோ, விசாலமோ, நிந்தையோ, கனவீனமோ எதுவானாலும் அதன் மத்தியிலும் அவர் பின் செல்வது தான் அர்ப்பணம். கர்த்தருக்கென்று உங்களை முழுமையுமாய் அர்ப்பணியுங்கள்.

**42. ஜீவ பலியாய் ஒப்புக்கொடுத்தல் என்றால் என்ன?**

அர்ப்பணிப்பை விட மேலான அனுபவம் இது. உயிர் போனாலும் சரி, உம் சித்தத்தை விட மாட்டேன் என உறுதியாயிருக்கிற அனுபவம் இது; அழைப்பை விட்டுவிடாமல் அழைப்பில் உறுதியாயிருக்கும் அனுபவம் இது. இயேசு சொன்னார் "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு அனுதினமும் என்னைப் பின்பற்றக் கடவன்" என்று.

இவ்விதம் உங்களை ஒப்படைத்தால் ஆண்டவர் உங்களை ஆட்கொள்வார். நீங்கள் அவர் கையில் இருக்கும் போது சாத்தான் ஆளுகையோ, சத்துரு ஆளுகையோ உங்களை மேற்கொள்ள முடியாது. அவரால் ஆட்கொள்ளப்பட்டு ஆண்டு நடத்தப் படுவீர்கள்.

ஒப்புவிக்கிறேன், நேச இரட்சகா
நான் யாவும் ஒப்புவிக்கிறேன்
அன்பு, பெலத்தால் நிரப்பி
என்னை ஆசீர்வதியும்.

**43. ஆமென் அல்லேலூயா ஓசன்னா என ஏன் ஜெபத்தில் அடிக்கடி சொல்கிறோம்?**

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென் றைக்கும் ஸ்தோத்தரிக்கப்படத் தக்கவர்; ஜனங்களெல்லாரும் ஆமென் அல்லேலூயா என்பார்களாக (சங் 106/48). நாம் ஆமென், அல்லேலூயா, ஓசன்னா சொல்ல வேண்டும் என்பது தேவனின் கட்டளையாகும். இந்த 3 வார்த்தைகளும் நாம் ஆண்டவரைத் தொழுகின்ற வார்த்தைகளாகும். ஜெபித்து முடிக்கும் போதும் ஆமென் சொல்லி முடிக்கிறோம். ஆமென் என்றால் அப்படியே ஆகக்கடவது என அர்த்தம். இது தொழுகைக்கும் பயன்படுத்தும் வார்த்தையாகும். பரலோகத்தில் 24 மூப்பர்களும், 4 ஜீவன்களும் ஆமென் அல்லேலூயா என்று சொல்லி சிங்காசனத்தின் மேல்

வீற்றிருக்கும் ஆண்டவரைத் தொழுகிறார்கள். (வெளி. 19/4). இன்றைக்கு அநேக கிறிஸ்தவக் கூட்டங்களிலே அல்லேலூயா சொல்லி ஆர்ப்பரிக்கிறார்கள்.

Hallelu என்றால் Praise என்று பொருள்.

Yah என்றால் யெகோவா.

Halleluyah என்றால் Praise the Lord என்று பொருள்.

அல்லேலூயா என்பது பரலோக பாஷையும், பூலோக பாஷையும் சேர்ந்தது. அல்லேலூயா என்ற வார்த்தையை பூமியிலும் சொல்கிறோம், பரலோகிலும் சொல்கிறோம். பரலோகில் தூதர்கள் அல்லேலூயா சொல்லித்தொழுகிறார்கள். அல்லேலூயா சொல்ல வெட்கப்படக் கூடாது.

'ஆமென்' என்கிற வார்த்தையும் ஆண்டவரைத் தொழுது கொள்ளும் வார்த்தை, 'ஆமென்' என்பது ஆண்டவருடைய திருநாமமாகவும் இருக்கிறது. (வெளி 3/14). ஆமென் என்று சொன்னால் அவர் வாக்குத்தத்தங்களெல்லாம் அப்படியே வந்து நம்மிடம் பலிக்கும் (II கொரி 1/20). ஆமென் என்றால் அப்படியே ஆகக் கடவது எனவும் பொருள். இது உறுதிப்படுத்துகிற வார்த்தையாகும்.

'ஓசன்னா' என்றால் 'வெற்றி' என அர்த்தம். 'கர்த்தாவே இரட்சியும்' என்றும் பொருள்படும். பரலோகிலும் ஓசன்னா என சொல்லித்தொழுகிறார்கள். மத்தேயு 21/9ல் உன்னதத்தில் ஓசன்னா என்றால் பரலோகில் ஓசன்னா என பொருள். 'ஓசன்னா' என்பது வெற்றி கொண்டாட்ட தொழுகை வார்த்தை. ஓசன்னா சொல்லி தொழுது கொள்வீர்களானால் உங்களுக்கு நிச்சயம் வெற்றி உண்டு.

**44. 'தாவீதின் வேர்' என்றால் பொருள் என்ன?**

வெளி 22/16ல் 'அவர் தாவீதின் வேரும், தாவீதின் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறார்" என வாசிக்கிறோம். தாவீதைப் போல் நாமும் விசுவாசிப்போமென்றால் நமக்கும் வேராக ஆண்டவர் இருப்பார். ஒரு அழகான ஆப்பிள் மரம் இருக்கிறது. நிறைய பழங்கள் இருக்கிறது. இரவில் உங்கள் சத்துரு வந்து வேரை அறுத்துப் போடுகிறான். வேரை துண்டித்தால் மரம் பட்டுப் போகும் என்பது சத்ருவுக்குத் தெரியும். நீங்கள் ஒரு நல்ல கனியுள்ள மரமாக இருக்கலாம்; உங்களை கனி கொடுக்க விடாமல் எப்படி கெடுப்பது என சாத்தானும் சத்ருவும் நினைப்பார்கள். எந்த

கண்ணியைப் போட்டால் இவர்களை ஆண்டவரை விட்டு பிரிக்கலாம் என்பது சாத்தானின் தந்திரம். ஆண்டவரை விட்டு பிரித்தப்பின் கனியும் இல்லை, மரமும் இல்லை. வேரை அறுத்து போட்டால் மரமும் கெட்டுப் போகும்; கனியும் இருக்காது.

நமக்கு வேராய் ஆண்டவர் இருக்கிறார்; வேரில்லாமல் பூ இல்லை; காய் இல்லை; கனியும் இல்லை; ஆண்டவரை உங்கள் வேராக்கிக் கொள்ளுங்கள். எப்படி தண்டு வேரோடு இணைந்திருக்கிறதோ அப்படியே ஆண்டவரில் நிலைத்திருந்து ஐக்கியப்பட்டால் அவர் நமக்கு வேராக இருப்பார். எப்போதும் ஆண்டவரோடு இருங்கள். அநேகருக்கு ஆண்டவரோடு இருப்பது என்றால் கசப்பாகயிருக்குது. ஆனால் T.V.யோடு இருப்பது என்றால் ரொம்ப பிரியம். நீ யாரோடு அதிகமாக இருக்கிறாயோ அந்த கனிகளைத்தான் கொடுப்பாய். சாத்தான் உன் வேராக இருந்தால் சாத்தானின் கனி தான் கொடுப்பாய். பாவம் உன் வேராக இருந்தால் பாவக்கனி தான் கொடுப்பாய். எப்போதும் தூங்கி கொண்டிருந்தால் எந்த கனியும் கொடுக்க முடியாது. உன் வாழ்க்கையில் வெற்றி வேண்டுமென்றால் ஆண்டவரை வேராக்கிக் கொள்.

**45. நீ பிரயோஜனமுள்ள பாத்திரமா?**

'வெறுமையான பாத்திரம் நான் வெறுத்து தள்ளாமலே, நிரம்பி வழியும் பாத்திரமாய் விளங்கச் செய்யுமே'. என ஜெபியுங்கள்.

ஒரு காலத்தில் களிமண்ணைப் போல எங்கேயோ இருந்தீர்கள். ஆனால் எந்த நாளிலே இந்த களிமண் குயவன் வீட்டிற்கு வந்ததோ அந்த நாளில் அந்த களிமண் ஒரு பாத்திரமாக மாறுகிறது. குயவன் வீடு தான் சபை. களிமண்ணை இங்கே கொண்டு வந்து விதவிதமாக வனைந்து வைத்திருக்கிறார். சில மண் பானை, மர பானை, தங்க பானை, வெள்ளி பானை. ஏதாவது ஒரு பானையாக நீ இருக்க வேண்டும். ஆனால் ஓட்டை பானையாக நீ இருக்கக் கூடாது. தங்க பானையாக இருக்க வேண்டுமென ஆசைப்படுவது தவறல்ல; ஆனால் ஓட்டை பானையாக நீ மாறிப் போவாயானால் ஒரு பயனும் இல்லை. உங்களைப் பிரயோஜனமுள்ள பாத்திரமாக மாற்றும்படி ஆண்டவரிடம் ஜெபியுங்கள்.

**46. கர்த்தரின் சாபம் நம்மேல் இருக்கிறதா? அல்லது ஆசீர்வாதம் நம்மேல் இருக்கிறதா? என்பதை எப்படிச் சோதித்துப் பார்ப்பது?**

ž வேலை செய்யாமல் சாப்பிட வேண்டும் என ஆண்டவர்

சொல்லவில்லை. நீங்கள் செய்யும் வேலை உங்களுக்கு சந்தோஷமாக இருக்கிறதா அல்லது துக்கமாக இருக்கிறதா? ஆண்டவருடைய ஆசீர்வாதம் இருந்தால் கடினமான வேலையை செய்ய வேண்டியது இருந்தாலும் அதை ஆண்டவர் எளிதாக்குவார். வேலை பளு உங்களை நசுக்காது.

ii) வேலைக்கேற்ற பலன் இருக்கிறதா?

வேலைக்கேற்ற கூ□இல்லை; பொத்தல் பையில் போட்டது போல போய் விடுகிறது; அதிக செலவு வருகிறது. ஆண்டவரின் ஆசீர் இருந்தால் கொஞ்சத்திலும் ஆண்டவர் உங்களை நடத்துவார்

iii) பிள்ளைகளால் உங்களுக்கு சந்தோஷம் இல்லையா? எவரும் விரும்பாத பாத்திரமாக மாறி விட்டீர்களா? அப்படியானால் ஆசீரை நீங்கள் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை.

iv) புசிப்பினால் சந்தோஷம் வருகிறதா? திருப்தி வருகிறதா? அல்லது திருப்தியில்லாமல் இருக்கிறதா? அப்படியானால் ஆண்டவரின் ஆசீர் உங்களுக்கு இல்லை.

v) உச்சியிருந்து உள்ளங்கால் வரை எல்லா நோயும் இருந்தால் கர்த்தரின் ஆசீர் உனக்கு இல்லை. ஆரோக்கியம் இருந்தால் உனக்கு கர்த்தரின் ஆசீர் இருக்கிறது.

## RtT¬úNÔRû] úLs®Ls :

இந்தக் கேள்விகளை உங்களிடமே கேட்டு மார்க் போட்டுப் பாருங்கள். ஆம் அல்லது இல்லை என்று அருகில் எழுதுங்கள்.

51. திக்கற்றவர்களையும் விதவைகளையும் ஒடுக்குகிறாயா?

    ஏரேமியா 22/3

52. கொடுமை செய்கிறாயா? எரேமியா 22/3

53. குற்றமில்லாத இரத்தத்தை சிந்துகிறாயா? எரே 22/3

54. அந்நிய தேவர்களைப் பணிந்து கொள்கிறாயா? அவைகளுக்கு ஆராதனை செய்கிறாயா? எரே 22/9

55. பிறரை சும்மா வேலைகொள்ளுகிறாயா? செய்கிற வேலைக்கு கூ□ கொடுக்கிறாயா? எரே 22/14

56. கர்த்தரைத் தேடி வரும் ஆத்துமாக்களைக் கெடுத்துச் சிதறடிக்கிறாயா? எரே 23/1

57. கர்த்தரையும், அவர் காரியங்களையும் அசட்டை பண்ணுகிறாயா? எரே 23/17
58. பொய் பேசுகிறாயா? எரே 23/32
59. குறிகேட்க போகிறீர்களா? எரே 29/8
60. கள்ளத் தீர்க்கதரிசனத்தினால் மோசம் போகிறீர்களா? எரே 29/8
61. முழு இருதயத்தோடும் ஆண்டவரைத் தேடுகிறாயா? எரே 29/13
62. பிறரை உனக்கு அடிமைப்படுத்துகிறாயா? எரே 34/10
63. உனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் கீழ்படிந்து செய்கிறாயா? எரே 35/10
64. கர்த்தருடைய வேலையை உற்சாகமாய் செய்கிறாயா அல்லது அசதியாய் செய்கிறாயா? எரே 48/10
65. உன் ஆண்டவரின் முன்னணையை அறிந்து சபை கூடி ஆராதிக்கிறாயா? ஏசாயா 1/3
66. அக்கிரமத்தோடே ஓய்வு நாளில் சபை கூடுகிறாயா? ஏசாயா 1/13
67. அக்கிரமத்தோடே பண்டிகைகளை அனுசரிக்கிறாயா? ஏசாயா 1/14
68. உன் கைகளால் பாவம் செய்கிறாயா? ஏசாயா 1/15
69. ஒடுக்கப்பட்டவர்களை ஆதரிக்கிறாயா? திக்கற்ற பிள்ளைகளை, விதவைகளை விசாரிக்கிறாயா? ஏசாயா 1/17
70. வசனத்துக்குக் கீழ்படிய மாட்டேன் என எதிர்த்து நிற்கிறாயா? ஏசாயா 1/20
71. கசப்பான கனிகளைக் கொடுக்கிறாயா? அல்லது நல்ல திராட்சப் பழங்களைத் தருகிறாயா? ஏசாயா 5/4
72. தீமையை நன்மையென்று சொல்லுகிறாயா? நன்மையைத் தீமையென்று சொல்கிறாயா? ஏசாயா 5/20
73. பரிதானம் வாங்கி குற்றவாளியை நீதிமானாகத் தீர்க்கிறாயா? ஏசாயா 5/23
74. கர்த்தருடைய வேதத்தை வெறுக்கிறாயா? அவர் வசனத்தை அசட்டை பண்ணுகிறாயா? ஏசாயா 5/24
75. உன் உதடுகள் அசுத்தமாயிருக்கிறதா? ஏசாயா 6/5
76. இதோ அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும் என ஜெபித்ததுண்டா? ஏசாயா 6/8
77. உன் ஆவிக்குரிய வாழ்வில் ஆரோக்கியமுண்டா? ஏசாயா 6/10

78. நீ கர்த்தரைப் பரீட்சை பார்க்கிறாயா? ஏசாயா 7/12

79. உன் பாவங்களினால் தேவனை விசனப்படுத்துகிறாயா? ஏசாயா 7/13

80. தீமையை வெறுக்கிறாயா? ஏசாயா 7/15

81. மனுஷருக்குப் பயப்படுகிறாயா? அல்லது கர்த்தருக்கு மாத்திரம் பயப்படுகிறாயா? ஏசாயா 8/13

82. கர்த்தருக்காகக் காத்திருக்கிறாயா? அவரை எதிர்பார்த்திருக்கிறாயா? ஏசாயா 8/17

83. ஏழைகள், விதவைகள், திக்கற்ற பிள்ளைகளை நேசித்து இரக்கம் பாராட்டுகிறாயா? ஏசாயா 10/1

84. அநியாய தீர்ப்பு செய்கிறாயா? ஏசாயா 10/2

85. கொடுமையான கட்டளைகளை எழுதுகிறாயா? ஏசாயா 10/2

86. உன் கண்கள் மேட்டிமையாகப் பார்க்கிறதா? ஏசாயா 10/12

87. நீ எதை, யாரை சார்ந்து கொள்கிறாய்? ஏசாயா 10/20

88. கர்த்தரை மகிழ்ச்சியோடு தொழுது கொள்ளுகிறாயா? ஏசாயா 12/4

89. கர்த்தருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவிக்கிறாயா? ஏசாயா 12/4

90. கர்த்தருக்குக் காணிக்கைகளையும், பொருத்தனைகளையும் செலுத்தி அவரை ஆராதிக்கிறாயா? ஏசாயா 19/21

91. கர்த்தரின் நாமத்தை மகிமைப் படுத்துகிறாயா? ஏசாயா 24/15

92. சத்தியத்தைக் கைக்கொண்டு நடக்கிறாயா? ஏசாயா 26/2

93. ஆண்டவரை உறுதியாய்ப் பற்றிக் கொள்கிறாயா? ஏசாயா 26/3

94. இரவிலே உன் ஆத்துமா ஆண்டவரை வாஞ்சித்துத் தேடுகிறதா? ஏசாயா 26/9

95. அதிகாலையில் ஆண்டவரைத் தேடுகிறாயா? ஏசாயா 26/9

96. உன் நெருக்கத்தில் ஆண்டவரைத் தேடுகிறாயா? ஏசாயா 26/16

97. அந்தரங்கமாக வேண்டுதல் செய்கிறாயா? ஏசாயா 26/16

98. மதுபானத்தால் மதிமயங்கி வழிதப்பிப் போகிறாயா? ஏசாயா 28/7

99. உன் அந்தரங்கக் கிரியைகள் தேவனுக்குப் பிரியமாக உள்ளதா? ஏசாயா 29/15

100. வழுவிப் போகிற மனதை உடையவனாக இருக்கிறாயா? ஏசாயா 29/24

# உலகமும் ஆளுகையும்

1. **அமெரிக்கா:** அமெரிக்காவில் 2008ல் 25 வங்கிகள் திவாலாகின. 2009 ஜனவரி, பிப்ரவரியில் 14 வங்கிகள் திவாலாகியுள்ளன. ஐசுவரியவான்களே! உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்கள் நிமித்தம் அலறி அழுங்கள் என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறுவதைப் பாருங்கள், யாக்கோபு 5ம் அதி வாசியுங்கள்.

   கர்த்தாவே! பணத்தின் மேல் நம்பிக்கை வைத்துப் பின்வாங்கிப் போகாமல் உம் மேல் நம்பிக்கையை வைப்பேனாக. உம் கிருபையினைச் சார்வேனாக. ஆவியில் எளிமை உள்ளவனாக மாறுவேனாக. உம்மைச் சார்ந்து உம்மைச் சேர்ந்து உம் மூலமாய் கனிகொடுப்பவனாக எம்மை மாற்றிடும் (லூக்கா 12/19)

   மகாபாபிலோனின் பொக்கிஷங்கள் பட்டயத்தால் அழிவதாக (எரே 50/37)

2. **ஜெர்மனி:** இங்கே பாவேரியா மாநிலத்தில் மர முகமூடி அணிந்து பசுமாட்டின் கழுத்துமணிகளை உடல் கட்டி அணிவகுத்துச் செல்லும் திருவிழா கொண்டாடுபவர்களை இரட்சியும்.

3. **இந்தியா:** சர்வதேச பொருளாதார நெருக்கடி நிமித்தம் இந்தியாவில் பொருளாதார சிக்கல் வர வாய்ப்புள்ளது. இந்தியப் பொருளாதாரம் 4 பேர் கைக்குப் போகுமென்று கர்த்தர் எனக்கு அறிவித்தார். பணத்தை நம்பும் ஜனங்கள் கர்த்தரை நம்பித் தப்புவார்களாக.

4. நடப்பு ஆண்டில் ஏற்றுமதி துறையில் 1 கோடி பேர் வேலையிழக்கும் அபாயம் உள்ளது. கர்த்தாவே! உம் பிள்ளைகளைப் பஞ்சத்திலும் போஷியும் (சங் 33/19)

5. பாகிஸ்தான் பொருளாதாரம் திவாலாகும் நிலையிலுள்ளது. பாகிஸ்தான் இந்தியா இடையில் சமாதானமுண்டாவதாக.போர்கள் மூளாதிருப்பதாக.

6. இராக்கில் அமெரிக்கக் கூட்டுப் படையிடம் பிடிபடும் போர்க் கைதிகள் குவான்டனமோ சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவது நிறுத்தப்படுவதாக.

7. ஸ்விட்சர்லாந்தின் வங்கிகளில் கணக்கு வைத்துள்ள இந்தியர்களின் பெயர்களும் அவைகளின் அளவும் வெளியரங்கமாவதாக. திருட்டுப் பணங்கள் பிடிபடுவதாக.

8. மனித அவதாரமாக வந்த இயேசுவே மெய்யான கடவுள். அவரையே போற்ற வேண்டும். அவரே பூமியனைத்திற்கும் இராஜா என்பதை ஜனங்கள் உணர்ந்து மனந்திரும்புவார்களாக.

ஜனங்கள் மனக்கண்களைக் குருடாக்கி வைத்துள்ள அசுத்த ஆவிகள் கட்டிப் போடபடுவதாக.

9. ருவாண்டா நாட்டில் இனக்கலவரங்கள் வராமல் இருப்பதாக. காங்கோ நாட்டின் இனக்கலவரங்கள் மாறிப் போவதாக.

ஆப்பிரிக்க நாடுகளில் வேளாண்துறை வளர்வதாக. ஆப்பிரிக்கா முன்னேறுவதாக. பட்டு நூல்இழைத் தொழில்கள் வளர்வதாக.

10. அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து போன்ற நாடுகள் அணு ஆயுதங்களை வரவர குறைப்பதாக.

11. தமிழகத்தில் புதைந்துள்ள தனிமங்கள் வெளியாக்கப்படுவதாக. அதனால் தமிழகம் செழிப்படைவதாக.

12. வங்கதேசத்தில் எலிகள் பெருகி விட்டபடியால் உணவுப்பஞ்சம் உண்டாகும் நிலமைகள் உள்ளன. நம் நாட்டிலும் பயிர் வகைகளை காய்கறிகளைத் தின்னும் புழுபூச்சிகள் பெருகி விட்டன. பச்சைப்புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது என்ற யோ 1/4 தீர்க்கதரிசனம் நிறைவேறுவதைக் கண்டு ஜனங்கள் மனந்திரும்புவார்களாக.

13. நோவா காலத்தில் உண்டான பெருவெள்ளத்தில் பூமியிலிருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்தன. நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்கள் மாத்திரம் காக்கப்பட்டன. (ஆதி 7/23). இப்பொழுது கொலம்பியாவில் கண்டுபிடிக்கப்பட்ட 45 அடி பாம்பின் எலும்புக் கூடு நோவா காலத்தில் வாழ்ந்த பாம்பாக இருக்கலாம். (யோபு காலத்திலும் இப்பாம்பு வாழ்ந்திருக்கலாம்). பைபிளில் சொல்லப்பட்ட லிவியதான் இதற்கு ஒப்புமை யாயிருக்கலாம். கர்த்தாவே எங்களோடே போராடுகின்ற சர்ப்பங்கள், தேள்கள், பறவைகள், மிருகங்கள், பூச்சிகள், புழுக்கள், விஷக்கிருமிகள், லிவியதான், சமுத்திர வலுகர்ப்பம், ராகாப் யாவும் கட்டிப் போடப்படுவதாக.

14. காங்கோவுக்குள் சமாதானம் உண்டாவதாக.

15. பர்மாவிலே ஜனநாயகம் மலர்வதாக; தழைப்பதாக.

16. அணு ஆயுத தயாரிப்புகள் உலகம் முழுவதும் கர்த்தரால் கட்டிப் போடப்படுவதாக.

17. கடைசிக்காலத்தில் பூமியில் அக்கினி, புகைக் காடாகிய அதிசயங்களைக் காட்டுவேன் என்ற தீர்க்கதரிசனம் (அப் 2/19) நிறைவேறுவதைக் கண்டு ஜனங்கள் மனந்திரும்புவார்களாக.

18. ஈராக்கில் நிலையான ஆட்சி உண்டாவதாக.

19. உலகமெங்கும் சமாதானம் உண்டாவதாக. ராணுவச் செலவுகள், வீண் செலவுகள் குறைவதாக. தேசங்கள் வறுமைக்குள் செல்லாமலிருப்பதாக.

20. ஒவ்வொரு நாட்டிற்கும் உள்ள எல்லைகள் சரியாகக் குறிக்கப்படுவதாக. எல்லைப் பாதுகாப்புகள் சரியாய்ச் செயல்படுவதாக. தீவிரவாதங்கள் விசாரிக்கப்படுவதாக.

21. புறஜாதிகளின் வீணான தேவர்களால் மழை பொழியப் பண்ண முடியாது. (எரே 14/22)

மேகங்கள் இல்லாத கட்டத்தில் மழை பொழிய வைக்க மனிதன் என்ன செய்வான்?

- கர்த்தரே மெய்யான தேவன் (எரே 10/11)

- வானத்தையும் பூமியையும் பிசாசுகள் உண்டாக்கவில்லை (எரே 10/11)

- கர்த்தர் சத்தமிடுகையில் வானத்தில் திரளான தண்ணீர் உண்டாகிறது. (எரே 10/13)

- அவர் பூமியின் கடையாந்தரத்திலிருந்து மேகங்களை எழும்பப் பண்ணுகிறார் (எரே 10/13)

- வானங்கள் தானாக மழை கொடுக்க முடியாது (எரே 14/22)

- கர்த்தராகிய இயேசுவே மழையைப் பொழியப் பண்ண முடியும். (எரே 14/22)

22. வேதனையில்லா மருந்து சிகிச்சை முறைகள் வளர்வதாக.

23. மேலிருந்து, வானத்திலிருந்து, வேறு கிரகங்களிலிருந்து வருகின்ற சகல ஆபத்துகளுக்கு (இயற்கை, செயற்கை) சபையை விலக்கிக் காப்பாற்றும் (ஒபதி 4, எரே 51/53)

24. கடைசிக்காலத்தில் வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் நட்சத்திரங்கள் (செயற்கை கோள்கள்) வானத்திலிருந்து விழும். (மத் 24/29)

மனுஷருடைய இருதயம் சோர்ந்து போகும் (பூமி மேல் வரும் ஆபத்துகள் நிமித்தம்) (லூக் 21/26)

25. பாபிலோன் வானபரியந்தம் ஏறினாலும் அதைப் பாழாக்குகிற வர்கள் கர்த்தரிடமிருந்து வருவார்களாக. சபைக்கு விரோதமான பாபிலோனின் தீவிரவாதங்கள் கவிழ்க்கப்படுவதாக. டோமாஹாக் மிஸைல் தாக்குதல் கட்டிப்போடப் படுவதாக.

# புதியவெப்ஸைட்

I 1. **VISIT OUR NEW WEBSITE**

(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

2. **WEBSITE ADDRESS IS www.hosannahchurch.org**

(இணையதள முகவரி: www.hosannahchurch.org)

3. **FEATURES INSIDE** (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா – ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வா□பர் பகுதி –ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் –ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் –ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS (அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

## இலவச அறுவைசிகிச்சை

பிறவி சம்பந்தக் குறைபாடுகளை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலம் ஜெர்மன் மருத்துவர்களால் இலவசமாக சரி செய்ய கொடைக்கானல் பாசம் மருத்துவமனையோடு தொடர்பு கொள்ளவும்.

&: (04542) 240668







**Dr. பிரின்ஸ்டன் ஜாய்,** M.B.B.S.,
**Dr. சூசன் பிரின்ஸ்டன்,** M.B.B.S.,
ஓசன்னா ஆலயம், **ஜாய் ஆஸ்பத்திரி,**
**பணகுடி** – 627 109, **தமிழ்நாடு.** & : (954637) 245273
WEB: www.hosannahchurch.org

1. *Published By :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,

2. *Owned By :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,

3. *Published From :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,
86/222H, Main Road,
Panagudi, Tirunelveli District

4. *Printed By :*
**Mr. Xavier Michael**

5. *Press Name with Full Address :*
**FRAN PRINTING PRESS**
**Mr. Xavier Michael,**
490/2, K.P. Road, Nagercoil - 2.

6. *Name of Editor :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,

7. *Title of News Paper :*
**Pattayam (T/M)**

8. *Registration Number (RNI) :*
**TNTAM / 2004 / 14466**

9. Periodicity : **MONTHLY**



To

*If undelivered please return to :*

**Dr. Princeton Joy,** M.B.B.S
**Dr.Susan Princeton,** M.B.B.S
✆ : (954637) 245273
HOSANNAH CHURCH, JOY HOSPITAL
222H, MAIN ROAD, PANAGUDI - 627109.
TIRUNELVELI DISTRICT,
TAMIL NADU, INDIA.

**படிப்பவர்கள், ஜெபிப்பவர்கள், அனைவரும் படிக்க கொடுத்து உதவுங்கள்.**